**Publication :** Dinakaran **Region :** Coimbatore

**Date :** Jan 10, 2011

# ‘நாளைய குழந்தை’ பயிலரங்கம்

கோவை, ஜன. 10: கோவையை சேர்ந்த ஐ டிஸ்கவரி என்னும் கல்வி நிறுவனம் சார்பில் குழந்தைகளிடம் உள்ள ஆற்றலை வெளிக் கொண்டு வரும் வகையில் ‘நாளைய குழந்தை’ என்னும் பயிலரங்கம் கோவை ரத்னா ரீஜன்ட் ஓட்டலில் நேற்று நடந்தது.

ஐ டிஸ்கவரி கல்வி நிறுவன மேலாண்மை இயக்குனர் ஆஷிஷ் ராஜ்பால், ஆர்.வி.எஸ் கல்வி அறக்கட்டளை மேலாண்மை அறங்காவலர் செந்தில்கணேஷ் ஆகியோர் பயிலரங்கை துவக்கிவைத்து பேசினர்.

குழந்தைகளுக்கு பல்வேறு கைவினை பயிற்சி அளித்தனர். இதில், 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர்.